யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு    விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 207 ஆங்கீரச ஆனி 07 (21.06.1992) ஞாயிறு


## சிறையில் உள்ளவர்களுக்கு உதவ சர்வதேச நிதியம்

எமது நிதியத்தின் முக்கியநோக்கம் சிறிலங்காவில் சட்ட உதவி பெறமுடியாதுள்ள சிறைக்கைதிகளுக்கும் முகாம்களில் சிறைவைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் சர்வதேச ரீதியில் உதவி வழங்குவதாகும். தமது பிள்ளைகள் தடுத்துவைக்கப்பட்டதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க எந்தவசதியுமில்லாத தாய்தந்தைபார்க்கு இந்த உதவி கிடைக்கும் இது தொடர்பாக கொழும்பிலுள்ள சட்டத்தரணிசன் சங்கத்தின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது 04-ம்பக்கம் பார்க்க

★ 1990 ஜூன் முதல் 1992 ஜூன் வரை

# வடக்கு, கிழக்கு யுத்தத்தால் 7 லட்சம் தமிழர் அகதிகள்

## வலி. வடக்கில் கடந்தவாரம் மட்டும் 50 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் வடக்கு கிழக்கில் ஆரம்பித்த யுத்தத்தின் பின் இவ்வாண்டு ஜூன் மாதம் வரை ஏழு லட்சம் தமிழர்கள் சொந்தப்பிரதேசங்களை விட்டு இடம் பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் அம்பாறை, திருகோணமலை மட்டக்களப்பு பகுதிகளில் அதிகளவு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதுடன் சிங்களவர் குடியேற்றப்படுவதனாலும் தமிழர்கள் மீளக் குடியேற முடியாத நிலை தோன்றியுள்ளது

இதேபோல வடக்கில் மன்னார், தீவுப்பகுதி, வலிகாமம் வன்னி பகுதிகளில் இருந்து ஏற்கனவே தமிழர்கள் வெளியேறியுள்ளனர்.

அத்துடன் இப்பகுதிகளில் படையினர் அடிக்கடி விமானத்தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் நடத்தி வருவதால் மீளக் குடியேற முடியாத நிலை தோன்றியுள்ளது

கடந்த வாரம் வலிகாமம் பகுதிகளில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையால் சுமார் 50 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 07

## காங்கேசன் துறைக்கு சிறிய கப்பல்களில் பொருள்

காங்கேசன் துறை களஞ்சியத்திற்கு தொடர்ந்தும் சிறிய கப்பல்களில் உணவுப் பொருட்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படுவதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

இந்தக் களஞ்சியத்தில் இருக்கும் உணவுப் பொருட்களை லொறிகள் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் இது குறித்து கொழும்பில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் பேச்சு நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 47

## வெளிநாடு சென்றவரும் குடும்ப அட்டையில் பதியலாம்

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளி நாடுகளுக்கு சென்றவர்களையும் குடும்ப பதிவு அட்டையில் பதிவதற்கு யாழ் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வெளியூர் சென்றவர்களை குடும்ப பதிவு அட்டையில் முன்னர் பதிவு செய்யவில்லை என்றும் தற்போது அவர்களையும் சேர்த்துப் பதிந்தால் தான் மீண்டும் அவர்கள் சொந்த இடங்களில் திரும்புவதற்கு இந்த குடும்ப பதிவு அட்டை பிரயோசனமாக இருக்கும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தது. 47

## இரட்டையப்புலம் அகதிகளுக்கு எதுவித உதவிகளும் இல்லை

இராணுவ நடவடிக்கையால் சண்டிலிப்பாயில் இருந்து இடம்பெயர்ந்து இரட்டையப்புலம் வைரவர் ஆலயத்துக்கு அருகில் பாடசாலையில் தங்கியிருக்கும் அகதிகள் தமக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் முறையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை நேரங்களில் தாம் வீதி யோரங்களில் தங்கவேண்டியுள்ளதாகவும் தமக்கு ஒரு நிரந்தர அகதி முகாம் ஒன்றை அமைத்து தரும்படியும் அவ்வகதிகள் கேட்டுள்ளனர்.

சுமார் 80 குடும்பங்கள் இங்கு தங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது 47

## பண்டத்தரிப்பு பகுதியில் அகதிகள் பெரும் அவதி

சில்லாலை கதிரை மாதா தேவாலய சூழல், சில்லாலை றோ.க பாடசாலை வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், பண்டத்தரிப்பு பற்றிமா மாதா தேவாலயம் ஆகிய பகுதிகளில் வந்துள்ள அகதிகள் சுகாதார வசதியின்றி அவதிப்படுவதைக் காண முடிகிறது

அத்துடன் இவர்களின் குழந்தைகளும் போதியவசதியின்றி அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதே வேளை அகதிகள் அமைத்த குடிசைகள் தற்போதைய கடும் காற்றினால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது 26

## படையினர் சூடு! இளைஞன் படுகாயம்

பத்தமேனியில் நேற்றும் பகல் வீட்டுக்கூரைத்திருத்தத்தை கூரையில் ஏறிக்கழற்றிக் கொண்டிருக்கையில் தூரத்தில் இருந்த இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துயாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்

சந்நதி வீதி பத்தமேனியைச் சேர்ந்த பழநித்துரை தவக்குமார் (14) என்பவரே படுகாயப்பட்டவராவார் 07

★ நான்கு அம்ச திட்டத்தில்

## சிங்களவர் முஸ்லிம்களுக்கு தகுந்த பாதுகாப்பு

பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தமிழ்க்கட்சிகள் சமர்ப்பித்த நான்கு அம்சத் திட்டத்தில் வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள முஸ்லிம்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக பி. பி. ஸி தெரிவித்தது

இத்திட்டம் அமைச்சர் தொண்டமானின் திட்டத்தை ஒத்திருப்பதாகவும் பி. பி. ஸி தெரிவித்தது.

## மாணவ மாணவிகளுக்கு போஷாக்கு குறைகிறது

இளம் மாணவ மாணவியரிடையே போஷாக்கு குறைந்து வருவதனால் அவர்கள் உடல் நலம் குன்றி வருவதாக சுகாதாரப்பகுதியினர் தெரிவித்து வருகின்றனர்

சொறி, சைமூட்டுகளில் உளைவு ஏற்படுதல், சோர்வு கண் பார்வை குறைவு ஆகியன இவர்களுக்கு ஏற்பட்டு வருகிறது

இவர்களில் பலர் "பீகோ" "பீருவல்" ஊசி மருந்தினைப் பெற்று வருகின்றனர்

ஆனைக்கோட்டையில் உள்ள ஒரு பாடசாலையில் மட்டும் அண்மையில் போஷாக்கு இன்மை காரணமாக 15 பேர் வரையில் கண் பாதிப்பிற்குள்ளாகி யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் 07

## தமிழகத்தில் கைதானவர்களை விடுதலை செய்ய உத்தரவு

கடந்தவாரம் தமிழகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்ட மின்சாரத்துக்கு கட்டணம் வசூலிப்பதென தமிழக அரசு முடிவு செய்ததை எதிர்த்து எதிர்க் கட்சிகள் இப்பேரணியை நடத்தின.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா புதுடில்லியில் இருந்து திரும்பியவுடனேயே இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

## படையினர் சூடு

நேற்று காலையும் மாலையும் மண்டைதீவுப் பகுதியில் உள்ள இராணுவத்தினரும் கல்முனை - பூநகரி இராணுவத்தினரும் கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி 50 கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

தெல்லிப்பழைப் பகுதியிலிருந்தும் படையினர் அம்பனை, தர்க்காபுரம் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 07

## ஷெல் தாக்குதல்

பூநகரி - கல்முனை பகுதியில் இருக்கும் இராணுவத்தினர் நேற்று முந்தினம் பிற்பகல் 6 மணியளவில் யாழ் கரையோர பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் 6 க்கு மேற்பட்ட ஷெல்கள் இராணுவத்தால் ஏவிவிடப்பட்டன

ஷெல்கள் சரியாக இலக்கு தெற்று கரையோரமாக வீழ்ந்து வெடித்திருக்கலாம் என கூறப்பட்டது.

## இப்படியும் வதந்தி

மாதகல் சேந்தான்குளம் பகுதிகளிலிருந்து 5 மைல் தூரத்திற்குள் எவரும் குடியமரக் கூடாது எனவும் சகலரும் வெளியேறிவிடவேண்டும் எனவும் இலங்கை வானொலி அறிவித்ததாக நேற்று வதந்தி பரப்பப்பட்டது.

திருடர்கள் தமது தொழிலைச் செய்ய இவ்வாறு வதந்தி பரப்புவதாக பின்னர் தெரியவந்ததாம்.

## மினிபஸ் சேவை

மண்ணெண்ணெய் விலை மீண்டும் குறைந்துள்ளதை யடுத்து மினிபஸ் சேவைகள் பாதிப்பின்றி நடைபெறுவதாக மினிபஸ் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## உண்ணாவிரதம்

தமிழக அரசின் கீழ் பணிபுரியும் சில ஊழியர்கள் தமது கோரிக்கையை முன்வைத்து நேற்று உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

## தையல் பயிற்சி நெறி

உடுப்பிட்டி வல்லை வீதியில் இன்று பி. ப 3 மணிக்கு தையல் பயிற்சி நெறி சர்வதேச செஞ்சிலுவைக்குழு பிரதிநிதி திருமதி வரோனிகாவினால் ஆரம்பித்து வைக்கப்படும்

விரும்பிய மாணவர்கள் இலவசமாக இப்பயிற்சி நெறியை பயிலலாம் என இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை பருத்தித்துறைப் பிரிவுத்தலைமையகம் அறிவித்துள்ளது

## நாய்களுக்கு தடுப்பூசி

நல்லூர் பிரதேச சபைப் பகுதியிலுள்ள கோக்குவில், கோண்டாவில் ஆகிய பிரதேச உப அலுவலக பகுதிகளில் உள்ள 648 நாய்களிற்கு விசர் நாய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர் எஸ் திவ்வியகுமாரன் ... 04ஆம் பக்கம் பார்க்க

★ தமிழ்க்கட்சிகள் கருத்து

# இணைப்பை பிரச்சினைக்குரிய விடயமாக்கி தீர்வைக்குலைக்க சிலர் முயல்கின்றனர்

வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தை ஒரு பிரச்சினைக்குரிய விடயமாக்கி இனப்பிரச்சினைக்கான தீர்வை சீர்குலைக்க சிலர் முயல்கின்றனர் என செழும்பில் தமிழ் அரசியற்கட்சிகள் தெரிவித்துள்ளன.

'வடக்குக் கிழக்கு இப்போதும் இணைந்த ஒரு மாநிலமாகவே உள்ளது. எனவே வடக்குக்கிழக்கு இணைப்பு ஒரு பிரச்சினைக்குரிய விடயமே அல்ல' எனவும் தெரிவித்துள்ள தமிழ்க்கட்சிகள் வடக்கையும், கிழக்கையும் இணைக்காமல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அரசியற் தீர்வையும் தாம் ஏற்கப்போவதில்லையெனவும் அறிவித்துள்ளன.

## கட்டுப்பணம் கட்டத் தவறியோர் ஒப்பந்தம் இரத்தாகும்

சமகாரர் ஒய்வூதியத்திட்டத்தில் இணைந்து இதுவரை ஐந்து தவணைக்கான கட்டுப்பணங்களைத் தொடர்ச்சியாகக் கட்டத்தவறிய விவசாயிகளின் ஒப்பந்தச் சான்றிதழ் செல்லுபடியற்றதாகிறது எனக் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இதன்படி இவ் ஒய்வூதியத்திட்டத்தில் இணைந்து ஐந்து தவணைகளுக்கான கட்டுப்பணத்தைத் தொடர்ச்சியாக செலுத்தத் தவறிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட அறுபது நாள் கருணைக் காலப்பகுதியினுள்ளும் அவர்கள் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தாமையால் இவ் விவசாயிகளின் ஒய்வூதியம், இயலாமைக்கான கொடுப்பனவு, மரணப் பணிக்கொடை போன்றவையும் உறுப்புரிமையும் ரத்துச்செய்ய முடிவாகியுள்ளது.

இது தொடர்பான கட்டுப்பணத்தைச் செலுத்தாமைக்கு நியாயபூர்வமான காரணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் குறிப்பிட்டு விவசாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பிக்கலாம்.

இம் மேன்முறையீட்டினை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் யாழ் மாவட்டக் கமத்தொழில் காப்புறுதிச் சபையினூடாக மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட விவசாயிகள் அறிவுறுத்தப் பட்டிருப்பதாக யாழ் மாவட்டக்கமத்தொழில் காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் க.சுந்தரேசன் தெரிவித்தார். (37)

## செவிப்புலன் குறைந்தோருக்கு இலவச 'இயர்போன்'

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் செவிப்புலன் குறைந்த மாணவர்களுக்கு இலவசச் 'செவிபண்ணி' (இயர்போன்) வழங்கப்படவுள்ளது.

இந்த இலவசச் 'செவிபண்ணி' யைப்பெற விரும்பும் மாணவர்கள் டாக்டரிடம் வைத்திய பரிசோதனை செய்து டாக்டர் வழங்கிய குறிப்புடன் அதிபர் மூலம் கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு பெயர்ப் பட்டியல்களை அனுப்பிவைக்க வேண்டும்.

கோட்ட ரீதியாக முன்னுரிமைப் பிரகாரம் இவை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

## காவலிலுள்ள விவசாயிகளை விடுவிக்க வாழப்பாடி கோரிக்கை

விவசாய பம்செட்டுகளுக்கான இலவச மின் விநியோகத்திட்டத்தை ரத்துச் செய்ய தமிழக அரசு எடுத்த முடிவை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்தமைக்காக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள விவசாயிகள் அனைவரையும் நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென தமிழ் நா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தமிழக அரசைக் கேட்டுள்ளார்.

இலவச மின் விநியோகத் திட்டம் நீடிக்கப்பட்டு அப்பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்துவிட்டபோதிலும், கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதில் தாமதம் காட்டப்படுவதாகவும் இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## விவசாய பாட திட்டங்களை ஒழுங்கமைக்க நடவடிக்கை

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல விவசாயம் கற்பிக்கும் பாடசாலைகளிலும் வேலைத் திட்டங்களை திட்டமிட்டு ஒழுங்கமைத்து செவ்வனே நிறைவேற்றுவதற்கான வழிகாட்டியாக அறிவுறுத்தல் ஒன்றை அதிபர்களுக்கும் விவசாய ஆசிரியர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

விவசாய பாடவேலைத் திட்டங்கள் என்னும் தலைப்புடைய இந்த அறிவுறுத்தலில் பாடசாலைகளில் மேற்கொள்ளவேண்டிய விவசாய செயற்பாடுகளும் திட்ட ஒழுங்குகளும் வரிசைப் படுத்திக்காட்டப்பட்டுள்ளன. (18)

## நாட்டின் பலபகுதிகளிலும் கடும் காற்று

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த இரு தினங்களாக கடும் காற்று வீசிவருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் பெருமளவு மரங்களும், கட்டிடக் கூரைகளும் சேதமடைந்துள்ளன.

மலையகத்திலும், மேற்கு கரையோரப் பகுதியிலும் இத்திடீர் காற்றினால் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. நுவரேலியா, ஹற்றன் பகுதியில் பலத்த காற்றுடன் மழையும் பெய்து வருகிறது.

பொல்காவலை, றம்புக்கனை அலவை, ஐாஎல, சீதுவை பகுதிகளில் நேற்று முன்தினம் கடும் காற்று வீசியது. இதனால் ரயில் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

## இம்மாதம் 26 ஆம் திகதி இலங்கைக்கு மோசமான நாளா?

இம்மாதம் 26 ஆம் திகதி நாட்டுக்கு மோசமான நாளா? இப்படி சபையில் கேள்வி எழுப்பி பிரஸ்தாபித்தார் முன்னாள் அமைச்சரான கே. பி. இரத்நாயக்கா.

'இம் மாதம் 26 ஆம் திகதி நாட்டுக்கு ஒரு மோசமான நாள் எனக் கூறப்படுகிறது. இந்த நாட்டிற்கு ஏதோ நடக்கப்போகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது' என அவர் அப்போது பிரஸ்தாபித்தார்.

## கொழும்பில் நிதி சேகரித்த தமிழ் இளைஞர்கோஷ்டி கைது!

கொழும்பிலுள்ள தமிழ் வீடுகளுக்குச் சென்று நிதி சேகரித்து வந்த தமிழ் இளைஞர் கோஷ்டியொன்று கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் செய்தியொன்று தெரிவிக்கிறது.

வெள்ளவத்தை 33 ஆம் ஒழுங்கையிலுள்ள தமிழர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற யாழ். வாலிபர் ஒருவர் இயக்கத்திற்கு தான் நிதி சேகரிப்பதாகக் கூறி அவ் வீட்டுக்காரரை மிரட்டி 10 ஆயிரம் ரூபா பணம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கோஷ்டிக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## 'வழிபாட்டு இடங்களை பாதுகாப்பு வலயங்களாக்குக'

வழிபாட்டு இடங்கள் பாதுகாப்பு வலயங்களாகக் கருதப்படல் வேண்டுமென யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

இதனை உறுதிப்படுத்தவும் அண்மையில் வடபகுதியில் நடந்தது போன்ற அழிவுகள் திரும்பவும் இடம்பெறாதிருக்கவும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் யாழ். பல்கலைக்கழகத்தின் ஐந்து பீடங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்' ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

## கனடாச் செய்திகள்

### இரு அரங்குகளில் திரைப் படங்கள்

கனடாவில் வாழும் தமிழர்கள் சிலர் அங்குள்ள இரு திரையரங்குகளை வாடகைக்கு அமர்த்தித் தென்னிந்தியாவில் வெளியாகும் தரமான தமிழ்த் திரைப்படங்களைக் கனடாவிலும் உடனுக்குடன் திரையிட்டு வருகின்றனர்.

கனடாவிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் சினிமாவுக்கும் கணிசமான பகுதி ஒதுக்கப்படுகிறது.

### தமிழ்த் திருமணங்கள்

கனடாவில் தற்போது தமிழ்த் திருமணங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதால் அங்குள்ள யாழ் வாசி ஒருவர் ஒரு திருமண வைபவத்திற்கு தேவையான சகல பொருள்களையும் வைத்து வாடகைக்கு வழங்குகிறார்.

இவரிடம் மாலை தோரணம், மணவறை தொடக்கம் ஐயர், மேளம் வரை சகலதும் உண்டு.

ஒரு திருமண வைபவத்திற்குச் சுமார் 10, 000 கனேடிய டொலர் வரை இவர் அறவிடுவதாக அங்கிருந்து வரும் தகவலொன்று கூறுகிறது.

இப்படி இன்னும் பலர் திருமண செட் வாடகைக்கு வழங்குகின்றனர்.

### ஐரோப்பியரும் பெருமளவில்

கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வருடாந்தம் பெருந்தொகையானோர் சட்டவிரோதமாகக் கனடாவினுள் நுழைந்து வருகின்றனர்.

இவர்களனைவரும் வேலைவாய்ப்புத் தேடியே கனடாவுக்குள் ஊடுருவுகின்றனர்.

### கோஷ்டி மோதல்கள்

கனடாவில் வாழும் நம்மவர்கள் சிலர் அடிக்கடி உதைபந்தாட்டத் துடுப்பாட்டப் போட்டிகளை நடத்துவதாகவும் போட்டி முடிந்தபின் இவர்கள் கோஷ்டி மோதல்களில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது'

### ஜப்னா ஸ்டோர்ஸ்

கனடாவில் வாழும் நம்மவர்களுக்கென யாழ்ப்பாண விற்பனை நிலையம் ஜப்னா ஸ்டோர்ஸ் ஒன்று இயங்குகிறது. இங்கு நம்நாட்டு உற்பத்திகள் யாவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் விலை சுமார் பத்து மடங்கு நம் நாட்டை விட அதிகம்.

மிக்ஸைற் சவர்க்காரம் தொடக்கம் சகல பொருள்களும் இங்கு விற்பனையாகின்றன.


### சிறுவிளம்பரம்

**சலவைத்தூள்**

மாணவமணிகளே! உங்கள் சீருடைகளைத் தூரிதமாகவும், பளிச்சிடும் வெண்மையாகவும் சலவை செய்ய, ''மிக்ஸைற்'' சலவைத்தூளைப் பாவியுங்கள். வெற்றுப் பக்கற்றுக்களைச் சேகரித்து, சேர்ப்பித்து, அறிவு, நீதி நூல்கள், அப்பியாசப் புத்தகங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள். உள்ளூர் உற்பத்தியை ஆதரியுங்கள் 'மிக்ஸைற்'

06045

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி**

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் ஆண்டு 9 (தரம் 8) கல்வித்தகைமையும் கொண்ட அரசாங்க/ அரசகூட்டுத்தாபன/ தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழிலில் (விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விப் பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 15/- இனை செலுத்திப் பற்றுச் சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது/ சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ மீ × 10 செ மீ அளவினதான கடித மேலுறையுடன் உதவிப் பதிவாளர் தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 31-07-1992

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் நேர்முகத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத் தேர்வு 20-09-92 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9 00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

குறிப்பு

பத்துவருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்

06046

## வாகரைக்கு உணவு எடுத்துச் செல்ல
## சமூகசேவை நிறுவனம் முயற்சி

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திலுள்ள தமிழ் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை விநியோகிக்க சமூகசேவை நிறுவனமொன்று முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் வாகரை உட்பட பெரும்பாலான இடங்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல அரசு தடைவிதித்துள்ளது.

வாகரைப்பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி முதல் தமிழ் மக்களுக்கான சகல பொருள்களுக்கும் சேவைகளுக்கும் இராணுவம் தடைவிதித்துள்ளது.

பல சமூகசேவை நிறுவனங்கள் ஏற்கெனவே இப் பகுதி மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்க முயற்சியெடுத்திருந்த போதிலும் அவை இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டன.

இந்த நிலையில் தற்போதைய முயற்சியும் வெற்றி பெறுமா என்ற ஐயம் எழுந்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## 1000 கோழிக்குஞ்சுகளை
## மாதாந்தம் வழங்க நடவடிக்கை

இறைச்சிக்குரிய ஒரு நாள் கோழிக்குஞ்சுகளை கால்நடை வளர்ப்போருக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

தேசிய கால்நடை அபிவிருத்திச்சபையிடமிருந்து 1000 கோழிக்குஞ்சுகளை ஒவ்வொரு மாதமும் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு விநியோகிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 'இந்திய வம்சாவளியினரின்
## விருப்பு, வெறுப்பும் அவசியம்

மன்னாருக்கான கப்பல் சேவையை ஆரம்பித்து விட்டால் மாத்திரம் இந்திய கடவுச் சீட்டுப் பெற்ற இந்திய வம்சாவளியினரை சரக்குகள் போல ஏற்றி இந்தியாவுக்கு அனுப்பிவிட முடியாது. அவர்கள் விருப்பு வெறுப்புகளையும் கவனத்திலெடுக்க வேண்டும்

நுவரெலியா மாவட்ட எம். பி முத்து சிவலிங்கம் பாராளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

## யாழ். பல்கலைக்கழக
## படிவங்கள் தனி ஆங்கிலத்தில்

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட உள்ள வெளிவாரிப் பட்டப்பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவங்களும், அறிவுறுத்தல்களும் தனி ஆங்கிலத்திலேயே விண்ணப்பதாரிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மொழி பெயர்ப்பு இல்லாமையினால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பலரும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 15

## மலையக இளைஞர்களை விடுவிக்க
## அமைச்சர் செல்லச்சாமி கோரிக்கை

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர்களை விடுதலை செய்யுங்கள் அல்லது அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் ஏதும் இருப்பின் நீதிமன்றத்தின் முன் நிறுத்துங்கள் என கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கிறிஸ் ரணதுங்கவைக் கேட்டுள்ளார்.

இதுகுறித்து ஒரு வாரங்களுக்குள் சாதகமான நடவடிக்கையை எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் கடும் மழை

தமிழ் நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் கடும் மழை பெய்துள்ளது.

உதகமண்டலம், கடலூர் பகுதிகளில் நான்கு நாட்களாக விடாது மழை பெய்துள்ளது.

இப்பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டதாகவும் நால்வர் மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மேலதிக பதிவாளர் பிரிவுக்கு
## அமைய எழுதுவினைஞர் நியமனம்

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவானவர்களில் ஐந்து பேர் யாழ் மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் நியமிக்கப்படவுள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வலுவலகத்தில் எழுதுவினைஞர் பற்றாக்குறையால் பிறப்பு, இறப்பு, விவாக பதிவு வேலைகள் தாமதமாகி வந்ததாகவும் அவ்வதிகாரி குறிப்பிட்டார். 47

## இளவாலைப் பகுதிகளில்
## திருடர்கள் கைவரிசை

இளவாலை விளான், முள்ளானை பகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்ததை சந்தர்ப்பமாக பயன்படுத்தி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கிணற்று வாளி, விறகு, மண்வெட்டி, கோழிகள் இரவு நேரம் திருடப்பட்டுள்ளன.

முள்ளானையில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் காரின் பகுதிகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது 26

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஜக்கம் கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 21-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

★ வலி. வடக்குப் பகுதியில்

# மேலும் பல பாடசாலைகள்
# தற்காலிக இடமாற்றம்

வலி. வடக்குப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகாரணமாக மேலும் பல பாடசாலைகள் தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் காங்கேசன்துறைக் கொத்தணியைச் சேர்ந்த பதினொரு பாடசாலைகளும், காரைநகர் கொத்தணியைச் சேர்ந்த பன்னிரெண்டு பாடசாலைகளும், தெல்லிப்பழை அம்பனைக் கொத்தணிகளில் எட்டுப் பாடசாலைகளிலும் ஏற்கனவே இடமாற்றப்பட்டிருந்தன

அண்மையில் ஏற்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக பாதிப்படைந்த ஐந்து கொத்தணிகளைச் சேர்ந்த 19 பாடசாலைகள் தற்காலிகமாக மேலும் இடமாற்றப்பட்டுள்ளன

பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில் மாலைநேரப் பாடசாலையாக இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம், பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் மாவிட்டபுரம் வடக்கு அ. மி. த. க. பாடசாலை, மாவிட்டபுரம் தெற்கு அ. மி. த. க பாடசாலை, சீனன் கட்டி ஞானோதயா வித்தியாலயம், சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் என்பனவும் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம், பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க. பாடசாலையிலும் நடைபெறும்.

மாதகல் நுணசை வித்தியாலயம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் காலையில் இணைந்தும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை றோ. க ஆரம்பப் பாடசாலை, மாரீசன் கூடல் றோ. க. பாடசாலை, வலித்துண்டல் றோ.க. பாடசாலை ஆகியன சில்லாலை றோ. க. பாடசாலையிலும் மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும், மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும் மாலை நேரமாக இயங்கவுள்ளன

இவைதவிர்ந்த ஏற்கனவே இடம்பெயர்ந்து வந்த காங்கேசன்துறைக் கொத்தணியைச் சேர்ந்த பலாலிவடக்கு அ.த.க. பாடசாலை, பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம், என்பனவும் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகியன மல்லாகம் மகாவித்தியாலயத்திலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக்கல்லூரியில் ஒரு பிரிவும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் மறு பிரிவுமாக காலை மாலையும் இயங்கி வருவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

இவற்றைவிட ஏற்கனவே இடம்பெயர்ந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் இயங்கிவந்த காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருப்பதனால் மாற்றொழுங்கு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. (20)

## காற்றினால் பாதிப்பு

தற்போது வீசும் கடும் காற்றினால் பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர் போன்ற கடற்கரைப் பகுதியில் உள்ள மீனவரின் வள்ளங்கள் பல நீரில் மூழ்கி இருப்பதை காணமுடிகிறது

அத்துடன் இம் மீனவர்களின் வள்ளங்களின் பாய்களும் தற்போது கிழித்தெறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இவர்களில் பலர் அகதி முகாம்களிலும், உறவினர்கள் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறையில்...

என பிரின்ஸ் குணசேகரா பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்

இன்று ஆரம்பிக்கப்படவுள்ள இந்த நிதியத்தின் நம்பிக்கையாளர் சபையில் பிரிட்டனைச்சேர்ந்த மூன்று முக்கிய பிரமுகர்கள் சேர்ந்துள்ளனர் அவர்களது உதவியுடன் இந் நிதியத்துக்கு தேவையான நிதியை சேகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சென். பற்றிக்ஸ் மைதானத்தில்
## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட 61 கழகங்கள் பங்கு பற்றிய பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பி. ப 3 30 மணிக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது

பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து - குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் இவ் இறுதிப் போட்டியில் ஆடவுள்ளது

இதற்கு முன்னதாக யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும், யாழ் மாவட்டத்தின் உதைபந்தாட்ட நடுவர்களுக்குமான காட்சி உதைபந்தாட்டப் போட்டி 2 30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப் போட்டிகளைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் இடம்பெறும் ஏற்கனவே நடைபெற்று முடிந்த வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில், முதல் மூன்று இடங்களையும் வெற்றியீட்டிய கழக வீராங்கனைகளுக்கான சான்றிதழ்களும், பதக்கங்களும் இன்றைய பரிசளிப்பு விழாவில் வழங்கப்படவுள்ளன.

## சுய விவரக் கோவைகள்
## பூரணப்படுத்தப் படுகின்றன

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களது சுய விபரக் கோவைகள் கோட்ட நிர்வாக அதிகாரியினால் பூரணப்படுத்தப்பட்டு வருகின்றன

அதிபர் ஆசிரியர்கள் இவர்களது சுய விவரக் கோவைகளில் முதல் நியமனக் கடிதங்கள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், தராதரப் பத்திரங்கள் இல்லாதிருப்பது கண்டு பிடிக்கப்பட்டு உரிய ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்டு இக் கோவைகள் பூரணப்படுத்தப்பட்டு வருகின்றன. 18

## யாழ். ஆஸ்பத்திரி ஊழியருக்கு
## கஷ்ட நிவாரணப்படி இல்லை

யாழ். பெரியாஸ்பத்திரி ஊழியர்களுக்கு அரசினால் அறிவிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டிற்குரிய கஷ்ட நிவாரணப்படி இன்று வரையில் வழங்கப்படவில்லை என ஊழியர்கள் தெரிவித்தனர்

இது சம்பந்தமாக வைத்தியசாலை உயர் அதிகாரிகள் பல தடவை கொழும்பு சென்று சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

யாழ் கோட்டை இராணுவ நடவடிக்கையின்போது யாழ். வைத்தியசாலையை அனுமதியின்றி மானிப்பாய்க்கு மாற்றப்பட்டதால் இதனை வழங்க தாமதிக்கப் படுவதாக காரணம் கூறப்பட்டு வருகிறது. 07

## மனநோயினால்
## பாதிக்கப்பட்டோர் அதிகரிப்பு

யாழ். வைத்தியசாலையில் அண்மைக்காலமாக சிகிச்சை பெற்றுவருபவர்களில் அனேகமானோர் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளவர்களாகும்.

இவர்களில் ஐம்பது வீதமானோர் மனநோயினால் பாதிக்கப்பட்டு மனநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்

1982 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் உண்டான தாக்கங்கள் பலவிதத்திலும் சகலரையும் பாதிப்படையச் செய்ததோடு மனநோயினையும் வரவழைத்துள்ளதாக மனநோய் சிகிச்சை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளினிக்கில் அண்மைக்காலமாக நோயாளர்கள் அதிகரித்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது

போர்க்காலச் சூழ்நிலையில் அண்மைக்கால நெருக்கடிகளால் மக்கள் மத்தியில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி மனநோய்ப் பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது 07

## நாய்களுக்கு -
## தெரிவித்துள்ளனர்

இதுவரை தடுப்பூசி போடப்படாத நாய்களுக்கு தடுப்பூசி போடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது 06

## முதலாவது
## செயலகம்

வவுனியாவில் ஜூலை முதலாம் திகதி முதல் புதிய பிரிவுச் செயலாளர் அலுவலகம் இயங்கத் தொடங்கவுள்ளது.

வடக்கு, கிழக்கில் அமைக்கப்படவுள்ள முதலாவது பிரிவுச் செயலகம் இதுவாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.